''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு கேளிக்கை வரி (திருத்த) சட்ட முனவடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 34/1982) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றப்படி நிறைவேற்றப்பெற்றது.

(9) அரசினர் தீர்மானம்

(அ) விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 3 (V)-ல் இருக்கும் தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 31/1982) வரிசையை மாற்றி, 3 (iii)-ஆக எடுத்துக் கொள்ள வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதி சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண். 31/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(இ) பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு, 1982

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலின்படி தமிழ்நாடு 1982 ஆம் பத்திரிகைப் பணியாளர்கள் நிவாரண நிதிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண். 31/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டுமென்று தீர்மானத்திற்குப் பதிலாக மேற்படி சட்டமுன்வடிவை ஆய்வு செய்வதற்கு 24 உறுப்பினர்கள், (16 சட்டமன்ற பேரவை

உறுப்பினர்களும், 8 மேலவை உறுப்பினர்களும்) அடங்கிய கூட்டாய்வுக் குழு ஒன்றை அமைக்க, சட்டமன்ற மேலவையின் இசைவைப் பெறுவதுடன், கூட்டாய்வுக்குழுவில் கீழ்க்கண்ட பேரவை உறுப்பினர்கள் பணியாற்ற தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்று மொழிகிறேன்.

1, திரு. கா. கோபாலகிருஷ்ணன்
2. திரு. ஜே. சி. டி. பிரபாகரன்
3. திரு. க. பாலசுப்பிரமணியன்
4. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
5. திரு. மா. சின்னராசு
6. திரு. கோ. விஸ்வநாதன்
7. டாக்டர் கே. சமரசம்
8. திரு. ஆர். ரங்கசாமி
9. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
10. திரு. மு. அம்பிகாபதி
11. திரு. கு. ரமணி
12. திரு. கே.எம். தங்கமணி
13. திரு. இல. பலராமன்
14. திரு. துரைமுருகன்
15. திரு. என். வி. என். சோமு
16. திரு. ப. நெடுமாறன்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(பிற்பகல் 1-10)

(6) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன் வடிவு எண் 32/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

(8) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஈ) தொழிலாளர் நல நிதி (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS